11. தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2020 நிறைவேற்றம்— மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி ஆற்றுப்படுகை மண்டலத்திற்குட்பட்ட வேளாண் நிலங்களைப் பாதுகாக்க கடலூர் மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோவில், மேல்புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி வட்டாரங்களை ஒருங்கிணைத்து, கடலூர் மாவட்டத்தில் இருக்கிற வேளாண் பெருங்குடி மக்களுடைய, விவசாய நிலங்களைப் பாதுகாக்க, விவசாயக் குடும்பத்தில் பிறந்து, விவசாயிகளுடைய நண்பனாக, பாதுகாவலனாக இருந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தலைசிறந்த காவேரி பாதுகாப்பு மண்டல சட்டமுன்வடிவை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடலூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். நன்றி, வணக்கம்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தை முதலிலே காணிக்கையாக்கிக் கொண்டு,*

'ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே'

என்ற மருதகாசி பாடலிலே அந்த வரிகள் எல்லாமே சிறப்பு வாய்ந்த வரிகள். அதிலே ஒரு வரி வரும்.

'நெற்றி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக அது
நெல்மணியாய் வெளஞ்சிருக்கு கொத்துக் கொத்தாக'

என்கிற அந்தப் பாடல் எல்லாம் எங்களுடைய வேளாண்மை மண்டலத்திலே வாழ்கிற விவசாயிகள் ஒவ்வொருவரும் முணுமுணுத்துப் பாடுகிற பாடல் வரிகள். அந்தப் பாடல் வரிகள் * இல்லாமல் போய்விடுமோ, இனிமேல் எங்களுடைய வாழ்வாதாரம் இல்லாமல் போய்விடுமோ என்று ஏங்கி நின்ற விவசாயிகள், வேளாண்மை மண்டலத்தைச் சேர்ந்த, டெல்டா பகுதியைச் சேர்ந்தவர்கள் ஏங்கி நின்றார்கள். தன்னுடைய சந்ததியினர் பாதிக்கப்பட்டுவிடுவார்களோ, பரம்பரை பாதிக்கப்பட்டுவிடுமோ என்று ஏங்கி நின்ற வேளையிலே, அந்தப் பாடலுக்கு மட்டுமல்ல, பாடிய உழவனுக்கு உயிர் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய உன்னத முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் அவர்களுக்கு டெல்டா பகுதி மக்களின் சார்பிலே கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுடைய உரிமையைப் பாதுகாத்தார்கள். காவேரி நதிநீர் பிரச்சினையில் நமக்கிருக்கிற உரிமையைப் பாதுகாத்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே அப்படியே ஆட்சி செய்கிற அருமைக்குரிய அண்ணன், தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஹைட்ரோ கார்பன் இல்லை; மீத்தேன் இல்லை. எங்களுடைய மண்டலம் வேளாண்மை மண்டலம்தான் என அறிவித்த அருமைக்குரிய அண்ணன் அவர்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து நாயகன், எங்களைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொண்டிருக்கிற குடிமராமத்து நாயகன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு டெல்டா பகுதி மக்கள் இன்றைக்கு, தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து, தங்களுடைய, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது ஒரு பாடலை பாடினார். அந்தப்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

பாடலைத் தொடர்ந்து ** என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார். இந்த நல்ல நேரத்திலே அது வேண்டாம். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதற்குப் பதிலாக, 'இல்லாமல் போய் விடுமோ' என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: சரி. அதற்குப் பதிலாக 'இல்லாமல் போய்விடுமோ' என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அவர்கள் இன்றைக்கு அம்மா வழியில் எங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் டெல்டா பகுதி, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்கிற பெருமையோடு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் டெல்டா பகுதி விவசாயிகள், டெல்டா பகுதியிலே பிறந்தவர்கள் காலமெல்லாம் நன்றியுடையவர்களாக, கடமைப்பட்டவர்களாக இருப்போம்; (மேசையைத் தட்டும் ஒலி) உடைமைபட்டவர்களாக இருப்போம் என்பதை இந்த நேரத்தில் நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இதை நிறைவேற்றித் தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் சிறப்பான பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களே, உங்களை வணங்கி மகிழ்கிறேன்.

“மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று
யானை கட்டி போரடித்த”

புகழுக்குரிய, காவேரி டெல்டா விவசாயப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, அதற்கு புயல் வேகத்தில் செயல்வடிவம் தந்து, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்கு சட்டப் பாதுகாப்பு தந்து, வேளாண் பெருமக்களின் பாதுகாவலர், குடிமராமத்து நாயகன், விவசாயிகளின் விசுவாசமிக்க விவசாயியாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் சார்பில் எனது நன்றியை, வணங்கி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்காக போராட்டம், போராட்டம் என்று, இல்லாத ஒன்றிற்காக தொடர் போராட்டங்களை நடத்தி, மக்களை திசைதிருப்ப நினைத்த எதிர்க்கட்சிக்கு, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு திண்டுக்கல் பூட்டு போட்டு பூட்டிவிட்டீர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம், பிப்ரவரி 24 ஆம் தேதியை மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக அறிவித்தீர்கள்.

இன்றையதினம், டெல்டா மண்ணைப் பாதுகாக்க சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கண்ணை இமை காப்பதுபோல, இந்த மண்ணையும், தமிழகத்துப் பெண்ணையும் பாதுகாக்க சட்டமும், திட்டமும் தந்து காப்பாற்றி வரும் எங்களின் அண்ணன்மார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களே, உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே ஒரு பொன்னாள். இதை ஏன் நான் கூறுகிறேன் என்று சொன்னால், இதுவரை தமிழகத்தில் யாரும் திரும்பிப் பார்க்காத வகையில், காவேரி

டெல்டா பகுதியில் வசிக்கும் வேளாண் பெருமக்களையும், அந்தப் பகுதியில் வாழும் அத்தனை மக்களையும் பற்றி கவலைப்படாமல் இருந்த காலகட்டத்தில், ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த, விவசாயியாகப் பிறந்த, நம்முடைய தமிழக முதல்வர் அண்ணன், குடிமராமத்து நாயகன், ஏழை காவலன், விவசாயிகளினுடைய தோழனாக இருந்து கொண்டிருக்கின்ற அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க, வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சட்டத்தை இங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக முதலில் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு, நன்செய் நிலங்கள் அதிகமாக உள்ள காவேரி டெல்டா பகுதிகளை, மிகவும் வளம்மிக்க வேளாண் மண்டலமாகப் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம் எனக் கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் உணவுப் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் தொழிற்சாலை தொடர்பான எந்தவொரு பணியினையும் இனி காவேரி டெல்டா பகுதியில் தொடரக் கூடாது எனத் தீர்க்கமான முடிவெடுத்து சேலம் மாவட்டம், தலைவாசலில் அனைவரின் பாராட்டையும் பெறும் வகையில் ஓர் அறிவிப்பை அறிவித்து, இன்று அந்த அறிவிப்பிற்கு செயலாக்கம் செய்யும் வகையில், அறிவித்த 10 நாட்களுக்குள்ளாகவே சட்ட வல்லுநர்களுடன் தீவிர ஆலோசனை செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சட்டத்தினை இயற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) இயற்றியதோடு மட்டுமல்லாமல், நிறைவேற்றி காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றி, அவர்களுடைய வாழ்வில் பாலை வார்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மை விசுவாசி, நம்பிக்கை நட்சத்திரம், மரியாதைக்குரிய அருமை அண்ணன் தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இன்றுவரை செயல்பட்டு வருகிற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், இந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய காவேரி டெல்டா மக்கள் சார்பாக, விவசாயிகள்

சார்பாக கோடானுகோடி நன்றிகளை சமர்ப்பித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலசலத்து ஓடும் காவேரியின் கிளை ஆறுகளையும், விரால் மீன்கள் விளையாடும் கால்வாய்களையும், வயல்களில் பறந்து திரியும் பறவைகளையும், கால்நடைகள் மேயும் பசுமையான சமவெளிகளையும் நமது அடுத்த தலைமுறைகளும் அனுபவிக்கும் வகையிலே தென்னிந்தியாவின் வயிற்றுப் பசியாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு பயன்படும் என நான் உறுதியாக நம்புகின்றேன். நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் எங்கள் தஞ்சை தரணியைப் பாதுகாக்கும் விதமாக பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்ததற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும், அரசையும் மனதாரப் பாராட்டி, இந்த நேரத்திலே இதற்கான விளக்கங்களை, குறிப்புகளை தங்குதடையின்றி சிறப்பான முறையிலே வெளிப்படுத்திய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற விழாவில் அறிவித்ததற்குப் பின்னால், எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக, நெடுவாசலில் நெடுங்காலமாக 365 நாட்களும், தினமும் ஒவ்வொரு விதமான போராட்டத்தை அறிவித்து, போராடிக்கொண்டிருந்தார்கள். அந்தப் போராட்டக் குழுவைச் சேர்ந்த ஒட்டுமொத்த விவசாயிகள், போராட்டக் குழுவை முன்னெடுத்துச் சென்றவர்கள், அதிலே பங்கெடுத்தவர்கள், முன்னின்று நடத்தியவர்கள், கட்சி பேதமில்லாமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், குறிப்பாக, கட்சிகளின் பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும்

நேரடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் சந்தித்தபொழுது, போராட்டக் குழுவின் தலைவர் வேலு ஆசிரியர் என்பவர் ஒரு கருத்தைச் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, விவசாயியாக நான் இந்த பச்சைத் துண்டை தொடர்ந்து போட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த பச்சைத் துண்டு சார்பில், விவசாயிகளின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் பணிவோடு சொல்கின்றேன், 'இதை நீங்கள் ஒரு சட்டமாக ஆக்கிக் கொடுத்தால் காலம் உள்ளவரை, வான் உள்ளவரை, வளி உள்ளவரை, ஊன் உள்ளவரை, உயிர் உள்ளவரை, விவசாயம் திளைத்திருக்கின்றவரை நீங்கள் போற்றப்படுவீர்கள்'. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் வரலாற்றிலே போற்றப்படுவீர்கள் என்று அந்தப் போராட்டக் குழுவின் தலைவர், மரியாதைக்குரிய வேலு ஆசிரியர் என்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தன்னுடைய உணர்வுகளை நேரடியாகப் பிரதிபலித்தார். ஆக, அந்த உணர்வுகளை இந்த நேரத்திலே, இந்த மன்றத்திலே பதிவு செய்வதை என்னுடைய கடமையாகக் கருதுகின்றேன். புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பில், டெல்டா மாவட்ட மக்கள் சார்பில், விவசாயிகளின் சார்பில், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த நெடுவாசல் கிராம மக்களுக்கு இன்றைக்கு ஒரு மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப் பாதுகாப்பை வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்னாளாம், பொன்னாளாம், பொலிவுதரும் இன்னாள், தமிழகத்தின் சட்டமன்ற வரலாற்றிலே மகத்தானதாகப் போற்றப்படுகின்ற நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது. இன்னும் சரியாகச் சொல்லவேண்டுமென்றால், விவசாயிகளுடைய இதய வயல்களில், மகிழ்ச்சி என்ற நெல் விதைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விதை வீரியமிக்க விதை. ஏனென்றால், முதலமைச்சருடைய சட்டப் பாதுகாப்பு என்ற விதை, வீரியம் மிக்க விதை. தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி என்ற மகசூலை அள்ளித் தருவார்கள் என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பில் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பில் நன்றி, நன்றி, நன்றி என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வாழ்க பல்லாண்டு என்று கூறி, வணங்கி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

பிற்பகல் 3–05

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று
யானை கட்டி போரடித்த"

தாய்த் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவேரி டெல்டா தஞ்சைப் பகுதியை மேம்படுத்துவதற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவை இம்மாமன்றத்தில் கொண்டு வந்து, உலக மானுட சமூகத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்கிற இந்தத் தாய் தமிழ் சமூகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அய்யா அவர்கள், துவக்க உரையிலே சுட்டிக்காட்டியதைப்போன்று, தமிழ்த் தாய் ஈன்றெடுத்த தவப் புதல்வி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மக்கள் நல்லரசு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவுகளையெல்லாம் நனவாக்குகிற மகத்தான அரசாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு விளங்குகிறது.

ஏற்கெனவே விவசாயிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை தங்குதடையில்லாமல் தாராளமாகத் தந்து, ஒட்டுமொத்த விவசாயப் பெருங்குடி மக்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், இந்தியாவில், வேறு எங்கும் இதுவரை நடந்திட முடியாத அளவிற்கு, டெல்டா மாவட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்று அறிவித்துள்ளார்கள். நான் அறிந்த வகையில், இந்தியக் குடியரசு நாட்டில் முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள்தான், வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சை டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, வெறும் 10 நாட்களில் சட்ட வடிவம் தந்து, இன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவைக் கொண்டுவந்துள்ளார்கள்.

நெடுவாசலிலே, கதிராமங்கலத்திலே நானும், என் ஆருயிர் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தமிமுன் அன்சாரி, திரு. கருணாஸ் உள்ளிட்ட நம்முடைய மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் போராட்டகளத்தில் மக்களோடு மக்களாய் நின்று போராடியபோது, உங்கள் கனவுகளை நனவாக்குவதற்கு உங்களுக்குத் துணை நிற்போம் என்று கூறினோம். இது, அங்கு போராடிய மக்களுக்குக் கிடைத்த வெற்றி. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இன்று இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது. அது வேளாண்குடி மக்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் கிடைத்த வெற்றி.

உழவர் சேற்றில் கால் வைத்தால்தான் நாட்டு மக்கள் சோற்றில் கை வைக்க முடியும் என்பதற்குச் சான்றாய் விளங்கும் வேளாண்குடி மக்கள் இந்தச் சட்டத்தால் மகிழ்ச்சியடைவார்கள். உலகத்தில் வாழுகிற ஒட்டுமொத்த மானுட சமூகத்திற்கும் உணவைத் தருகிற இந்த மண்டலத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் பதிவு செய்து, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், சொல்லுங்கள்.

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி
விவசாயி, விவசாயி”

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் திரைப்படத்தில் பாடிய இப்பாடல் ஒலிக்காத இடங்கள் இல்லை, கேட்காத காதுகள் இல்லை.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மன்றத்தில் இருந்த ஒவ்வொரு நாளுமே எனக்கு சந்தோசமான நாட்கள்;

மறுப்பதற்கில்லை, மறைப்பதற்கில்லை. அதற்குப் பிறகு, அக மகிழ்ச்சியோடு, மிக மிக மகிழ்ச்சியோடு இருக்கக்கூடிய தருணம் இந்தத் தருணம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தஞ்சையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தமைக்காக ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளையும், வணக்கங்களையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரேயொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, தமிழக முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர், தன்னை, ஒரு விவசாயி, விவசாயி என்று பலமுறை சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட, எல்லோரையுமே இலகுவாக சந்திக்கக்கூடிய ஒரு எளிய மனிதராக, (மேசையைத் தட்டும் ஒலி) தன் பதவிக்கு அப்பாற்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தான் முதலமைச்சர் என்கின்ற கர்வத்தைத் துறந்து, சக கட்சிக்காரராக, சக அமைச்சர்களோடு அமைச்சராக, சக மனிதர்களோடு மனிதராக பழகக்கூடிய ஓர் இயல்பான குணத்திற்கு சொந்தக்காரராகவும் விளங்குகிறார். அதே தருணத்தில், முடியும், முடியாது, (மேசையைத் தட்டும் ஒலி) முடிந்தால் முடியும்; முடியாது என்றால் முடியாது என்கிற இரு வரிகளை அவர் வாழ்நாளிலே நான் அவரைச் சந்தித்த காலத்திலிருந்து பார்க்கிறேன். குறிப்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுப்பதற்காக அவரிடத்திலேதான் என்னை அனுப்பினார்கள். அன்றிலிருந்து இன்று வரை பார்க்கிறேன், பதவிகள் உயர்ந்தாலும், அவருடைய பண்பும், உண்மையும் மாறாமல் இருக்கிறது, இதை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தருணத்தில், இன்றைய சட்டமன்ற நிகழ்வு என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

நான் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்தவனாக இருந்தாலும்கூட, என் தாய், தகப்பனார் பிழைக்கச் சென்றது தஞ்சாவூர் மாவட்டம். நான் பிறந்ததெல்லாம் தஞ்சைதான். 9 ஆம் வகுப்பு வரை நான் படித்ததெல்லாம் குருவிக்கரம்பை, மருங்கப்பள்ளத்தில்தான். பிறகு, 10, 11, 12 ஆகிய வகுப்புகளை ஆலங்குடியில் படித்து, சென்னைக்கு பிழைக்க வந்தேன்.

அருமைத் தம்பி அன்சாரி கூறியதைப்போல், அந்தக் காலத்திலே ஆறுகளிலே நீர் வருவதும், ஆற்று வழித்தடங்களிலே மீன்கள் குதித்து நிற்பதும், அந்த மீன்களை சாதாரண ஒரு பக்கெட்டை வைத்துக்

கொண்டு பிடித்துக் கொண்டு சென்று, சமைத்து சாப்பிட்டதும் என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. அப்படிப்பட்ட அந்த மண்ணிலே கொண்டுவரப்பட்ட ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட திட்டங்களினால், அங்குள்ள மக்கள் பட்ட கஷ்டங்களும், நடத்திய போராட்டங்களும் ஏராளம்.

பிற்பகல் 3–10

அண்ணன் தனியரசு அவர்கள் சொன்னதைப்போல் நாங்களெல்லாம் சென்றிருந்தாலும்கூட, இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, அதாவது பல சட்ட அமைச்சர்களை பல சட்டமன்றங்கள் பார்த்திருக்கும். சட்டத்திற்கு அமைச்சராக இன்றைக்கு இருக்கிற எனது அருமை அண்ணன், இந்த இடத்திலே அனைவருடைய சந்தேகங்களுக்கும் மிகத் தெளிவாக (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையிலே, ஆதாரத்தின் அடிப்படையிலே மிகத் தீர்க்கமாக எந்தவிதமான குறிப்புகளும் இல்லாமல் முழக்கமிட்டு, இந்த அவையிலே அத்தனை பேருடைய நம்பகத் தன்மையையும் பெற்று, ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கு இதைப் பற்றி இருக்கக்கூடிய சிறு, சிறு ஐயப்பாடுகளை விளக்கி, துடைத்தெறிந்து, ஓர் உன்னதமான, மகத்துவமான எதிர்கால தமிழ் சமூகத்தையும், எதிர்கால விவசாயத்தையும் பாதுகாக்கக்கூடிய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை மீண்டும் எடப்பாடியார் அவர்கள் மூலமாக நிரூபணம் செய்தமைக்காக (மேசையைத் தட்டும் ஒலி) நான் சார்ந்த என் முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும், ஒட்டுமொத்த தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும் மனமார வாழ்த்தி விடைபெறுகிறேன். வாய்ப்புக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*